2022 அக்டோபர் 19] [திரு. கே. என். நேரு]

செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். 1,200 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள், பாதாள சாக்கடைத் திட்டம், இருக்கிற கழிவுநீர் போவதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டு, அதற்காக நிதி ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிராமங்களுக்குக் குடிநீர் தருவதற்காக 8,500 கோடி ரூபாய், ஒன்றிய அரசினுடைய நிதியாக 8,000 கோடி ரூபாய் என மொத்தம் 16,500 கோடி ரூபாய், புதிய குடிநீர்த் திட்டங்களுக்காக இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். சென்னைக்கு கிட்டத்தட்ட 7,388 கோடி ரூபாய்; 16,390 கிலோ மீட்டர் நீளத்திற்கு அனைத்துச் சாலைகளையும் செப்பனிடுவதற்காக இந்த நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நீங்கள் கொடுத்த இந்த நிதியை உரிய முறையிலே பயன்படுத்தி மக்களுக்கு நல்ல முறையிலே பயன்பட துறை நிச்சயமாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்து, தங்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் துறையின் சார்பாகத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.